# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு ஜனவரி 20ம் நாள் புதன்கிழமை மாலை 4.35மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 - பிரிவு 303–ன்கீழ் கரூர் நகராட்சியில் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கு உரிமையாணை கட்டணங்கள் நகர்மன்ற தீர்மானம் எண்.2588 நாள்.11.12.2020–ன் படி நகராட்சிகள் சட்டம் 1920 – பிரிவு 245,249,250,258,262,269 மற்றும் 270 –ன் கீழ்வரும் தொழில்களுக்கு 01.04.2021 முதல் 50 சதவிகிதம் உயர்வு செய்து திருத்தி அமைத்து தீர்மானிக்கப்பட்டது.

இப்பொருள் சம்மந்தமாக ஆட்சேபனை ஏதும் இருப்பின் 15 நாட்களுக்குள் தெரிவிக்கும்படி தினத்தந்தி நாளிதழில் 06.01.2021–ம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் இந்நாள் வரை ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெற வில்லை.

எனவே 01.04.2021 முதல் 50 சதவிகிதம் உயர்வு செய்து திருத்தி அமைக்கப்பட்ட உரிமையாணை கட்டணங்களை வசூல் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>
(1) மன்றம் அனுதிக்கலாம்.
(2) 11.12.2020–ஆம் தேதிய தீர்மான எண்.2588–ன்படி 01.04.2021 முதல் திருத்திய உரிமையாணை கட்டணங்கள் வசூல் செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(3) உரிமையாணை கட்டணங்கள் உயர்வு செய்யப்பட்டதை கரூர் மாவட்ட அரசிதழில் (DISTRICT GAZETTE) பிரசுரம் செய்ய ஆகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவினம் செய்து கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மான எண்.10 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சி வார்டு எண்.15 முதல் 32 வரையுள்ள பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள பிரதான நீரேற்றும் குழாய்கள், பகிர்மானக் குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00இலட்சத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(இ2/323/2021)

தீர்மான எண்.11 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய்களால் பொதுமக்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படுவதாக அரசுத் துறை மற்றும் பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து தடுப்பூசி போட்டு மீண்டும் பிடித்த இடத்திலேயே விடும் பணிகளை மேற்கொள்ள 06.01.2021 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் (ஒன்றுக்கு) ரூ. |
|---|---|---|
| 1) | Voice for Animals, Chennai | ரூ.700 (ரூபாய் ஏழு நூறு மட்டும்) |
| 2) | Heart to Heart Vet Foundation, Chennai | ரூ.750 (ரூபாய் ஏழு நூற்றி ஐம்பது மட்டும்) |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Voice for Animals, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/5956/2006)

தீர்மான எண்.12 அனுமதிக்கப்பட்டது.

4)கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து பொதுமக்களும் மழைக் காலங்களில் கவனிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் டெங்கு மற்றும் கொசுக்கள் மூலம் பரவக்கூடிய நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் மேலும் கொரோனா தொற்று தொடர்பாக விழிப்புணர்வு குறித்தும் விரிவாக விளம்பரம் செய்யும் விதமாக சுவரொட்டி (Stickers) அச்சடித்து சப்ளை செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.2628 நாள்31.12.2020—ல் ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 20.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | எண்ணம் | Tirunelveli District Multi purpose Service Industrial Co-Operative Society Ltd. Tirunelveli | Small Scale Industries Service Industrial Co-Operative Society Ltd. Kovilpatti. |
|---|---|---|---|---|
| 1 | டெங்குகாய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் | 1 | ரூ.18.88/— | ரூ.17.70/— |
| 2 | மழைகாலம் மற்றும் குளிர் காலங்களில் கவனிக்க வேண்டியவை குறித்த ஸ்டிக்கர்கள் | 1 | ரூ.18.88/— | ரூ.17.70/— |
| 3 | கொரோனா பற்றிய சமூக இடைவெளிஅவசியம் குறித்த ஸ்டிக்கர்கள் | 1 | ரூ.18.88/— | ரூ.17.70/— |
| 4 | திடக்கழிவுமேலாண்மைதிட்டத்தின் கீழ்மக்கும் மற்றும் மக்காதகழிவு பற்றிய விவரம் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் | 1 | ரூ.18.88/— | ரூ.17.70/— |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Small Scale Induatries Service, Industrial Co-Operative Society Ltd. Kovilpatti அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/10074/2017)

தீர்மான எண்.13 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2019—2020ம் ஆண்டின்கீழ் கரூர் நகராட்சிக்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் மற்றும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்கண்ட பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ3/2835/2019 நாள்.08.01.2021ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கரூர் நகராட்சி, 20வது வார்டு பசுபதி லே அவுட் பகுதியில் சுகாதார வளாகம் அமைத்தல் | 15.00 |

அலுவலகக் குறிப்பு
மன்றம் பதிவு செய்யலாம். (இ1/7620/2019)

தீர்மான எண்.14 அனுமதிக்கப்பட்டது.

6)கரூர் நகராட்சிபொதுசுகாதாரப் பிரிவுக்குசொந்தமானவாகனம் TN47AH8849, காம்பாக்டர் வாகனம் 08.10.2020–ஆம் தேதியன்று கரூவூரிலிந்து அரியலூருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகள் பாலிதின் பைகளில் எடுத்து செல்லும் போது வாகனம் விபத்துக்குள்ளானது, விபத்துக்குள்ளான வாகனத்தின் பழுதுகள் மற்றும் கட்டுமான பணிகள் செய்வதற்கு 10.11.2020–ஆம் தேதியன்று வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மணையான ஜெயலட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ் & ஏஜென்சீஸ், நாமக்கல் நிறுவனத்தின் மதீப்பீட்டு பட்டியல் கோரப்பட்டதில், வாகனத்தின் பழுது பணிகள் கட்டுமான பணிகள் செய்வதற்கான தோராய செலவினம் ரூ.510000/–க்கான மதீப்பீட்டு பட்டியல் வழங்கியுள்ளது. மேலும் வாகனத்தின் அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப் பணிக்கு வாகனம் தேவை என்பதால் வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் வழங்கியுள்ள மதீப்பீட்டு பட்டியலில் தெரிவித்துள்ள உத்தேச தொகை ரூ.510000/–க்கான செலவினங்கள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.510000/–ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமணை ஜெயலட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ் & ஏஜென்சீஸ், நாமக்கல், நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/6878/2020)

தீர்மான எண்.15 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. கரூர் நகரிலிருந்து திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஈரோடு, கோவை, சேலம், சென்னை, பெங்களூர் முதலிய ஊர்களுக்கு சென்று வரக்கூடிய மையப்பகுதியில் கரூர் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. கரூர் பஸ் ஸ்டாண்டு ரவுண்டானா – கோவை ரோடு சாலை, பேருந்து நிலையத்தில் இருந்து கரூர்- திருச்சி செல்லும் சாலை, கரூர் - ஈரோடு – கோவை செல்லும் சாலை, A1 பெட்ரோல் பங்க் – வாங்கப்பாளையம் சாலை, ICICI பேங்க் – திருமாநிலையூர் ரவுண்டானா சாலை மற்றும் கரூர் பஸ் ஸ்டாண்டு ரவுண்டானா – சர்ச் கார்னர் சாலை வாங்கப்பாளையம் – அரசு காலனி சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை–7, தேசிய நெடுஞ்சாலை–67 இணைப்பு ரவுண்டாவிலிருந்து பிரிவு சாலை செல்லும் வழி பிரதான சாலைகளாக நெடுஞ்சாலைத்துறை சாலைகளாக இருப்பதாலும், நகரப்பகுதியில் உள்ளதால் சாலைகளில் சாலை ஓரத்தில் உள்ள தெருவிளக்குகளின் வெளிச்சம் போதுமானதாக இல்லாமல் உள்ளது.

மேலும் கரூர் நகரமானது ஜவுளி ஏற்றுமதியில் இந்தியாவின் முன்னனி நகரமாக திகழ்வதால் நகரின் அழகுப்படுத்துவதை கருத்தில் கொண்டு மூன்று மற்றும் நான்கு சந்திப்பு சாலைகளில் இரவு நேரத்தில் போதிய மின் ஒளியுடன் பராமரிக்க, சாலையின் மையப்பகுதியில் Mini Mast மின்கம்பங்கள் அமைத்து இருபுறமும் ஒளி தரக்கூடிய எல்.இ.டி பிட்டிங்கல்களுடன் கூடிய தெருவிளக்கு அமைக்க சாலை பாதுகாப்பு திட்டம் 2020 – 2021 ஆண்டு நிதியின்கீழ் கீழ்க்கண்டுள்ள பணிகளை மேற்கொள்ளவதற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்.D4/5836/2020, நாள்.11.01.2021ல் ரூ.150.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு வரப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புதிய 23 எண்ணிக்கை தெருவிளக்குகள் (Double Bracket Octagonal Pole) மற்றும் மின் உபகரணங்கள் பொருத்தி பணிகளை மேற்கொள்ளுதல் (தேசிய நெடுஞ்சாலை 7/ தேசிய நெடுஞ்சாலை 67 இணைப்பு ரவுண்டாவிலிருந்து பிரிவு சாலை செல்லும் வழி) | **25.00** |

| | | |
|---|---|---|
| 2 | புதிய 10 எண்ணிக்கை தெருவிளக்குகள் (Double Bracket Octagonal Pole) மற்றும் மின் உபகரணங்கள் பொருத்தி அமைத்தல் மற்றும் 150 வாட்ஸ் MHL விளக்குகளுக்கு பதிலாக 120 வாட்ஸ் LED விளக்குகள் பொருத்தும் பணி (பஸ் ஸ்டாண்டு ரவுண்டானா முதல் கோவை ரோடு ரவுண்டானா வரை) | **25.00** |
| 3 | புதிய 8 எண்ணிக்கை தெருவிளக்குகள் (Double Bracket Octagonal Pole) மற்றும் மின் உபகரணங்கள் பொருத்தி அமைத்தல் மற்றும் 150 வாட்ஸ் MHL விளக்குகளுக்கு பதிலாக 120 வாட்ஸ் LED விளக்குகள் பொருத்தும் பணி (A1 பெட்ரோல் பங்க் முதல் வாங்கப்பாளையம் வரை) | **25.00** |
| 4 | புதிய Mini Mast விளக்குகள் பொருத்தி அமைத்தல், 150 வாட்ஸ் MHL விளக்குகளுக்கு பதிலாக 120 வாட்ஸ் LED விளக்குகள் பொருத்துதல் (ICICI வங்கி முதல் திருமாநிலையூர் ரவுண்டானா வரை) | **25.00** |
| 5 | புதிய Mini Mast விளக்குகள் பொருத்தி அமைத்தல், 150 வாட்ஸ் MHL விளக்குகளுக்கு பதிலாக 120 வாட்ஸ் LED விளக்குகள் பொருத்துதல் (பஸ் ரவுண்டானா முதல் சர்ச் கார்னர் வரை) மற்றும் தானியங்கி சுவிட்சுகள் பொருத்துதல் (Entire Karur Municipality) | **25.00** |
| **6** | புதிய Mini Mast விளக்குகள் பொருத்தி அமைத்தல், புதிய 90வாட்ஸ் மாற்றி (Existing Pole) அமைத்தல், தானியங்கி சுவிட்சுகள் (Entire Karur Municipality) பொருத்துதல் (வாங்கப்பாளையம் முதல் அரசு காலனி வரை) | **25.00** |

அலுவலக குறிப்பு:
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ3/13293/2020)

தீர்மான எண்.16 அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான இலகுரக வாகனங்கள் TN47 AL 6703, TN47 AL 6711, TN47 AL 6727, TN47 AL 6729, TN47 AL 6939, TN47 AL 6741, TN 47 AL 6770, TN47 AL 6774, TN47 AL 6783, TN47 AL 6784, TN47 AL 6793 ஆகிய வாகனங்களுக்கு 2021ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க, அங்கீகாரம் பெற்ற பணிமனை மூலம் பழுதுகள் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், எதிர்வரும் 2020–2021ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதால் பொதுசுகாதார பணிகள் பாதிக்காமல் இருக்கும் வண்ணம் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும். மேற்படி வாகனத்திற்கு உத்தேசமாக ஒரு வாகனத்திற்கு ரூ.75000/– வீதம் 11 இலகுரக வாகனங்களுக்கு ரூ.825000/– செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு சொந்தமான இலகுரக வாகனங்களுக்கு 2021ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க மராமத்து பணிகள் செய்து கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.825000/–க்கு நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)அரசின் உச்சவரம்பிற்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/90/2021)

தீர்மான எண்.17 அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் நகராட்சி சணப்பிரட்டி பகுதியில் வார்டு எண்.33ல் பராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்தில் கூடுதலாக கட்டிடம் கட்ட மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதன் பேரில் கூடுதலாக சமுதாய கூடத்தில் கட்டிடம் கட்டும் பணிக்கு செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை 4.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.4.00இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1077/2021)

தீர்மான எண்.18 அனுமதிக்கப்பட்டது.

10)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்களுக்கு தூய்மை பணிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் சுத்தம் செய்யும் பணிகள் 2020–2021–ம் ஆண்டுக்கு தேவையான தளவாட சாமான்கள் சப்ளை செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.2614 நாள்31.12.2020–ல் ரூ.7.00 லட்சம் மதீப்பீட்டில் பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 20.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| எண். | விபரம் | எண்ணிக்கை | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 60/101,ஏ/பி.நெ.6 ஆர்.எஸ்.பில்டிங், குளக்கரைதெரு, காமராஜ் நகர், நாமக்கல் | ஸ்ரீஅத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், 1/34, காளப்ப நாயக்கன் பட்டி, சேந்தமங்கலம், நாமக்கல் |
|---|---|---|---|---|
| 1 | மூங்கில் கூடை | 1 | 488 | 495 |
| 2 | தட்டிமார்(தென்னை) | 1 | 394 | 402 |
| 3 | சாக்கடைகரண்டிபிடியுடன் | 1 | 488 | 490 |
| 4 | 2பல் கொக்கி பிடியுடன் | 1 | 812 | 820 |
| 5 | கூட்டு மாறுதென்னை | 1 | 49 | 50 |
| 6 | மண் அள்ளும் பிளாஸ்டிக் சட்டி | 1 | 446 | 460 |
| 7 | மண் அள்ளும் பிளாஸ்டிக் கூடை | 1 | 692 | 704 |
| 8 | அரிவாள்பிடியுடன் | 1 | 686 | 692 |
| 9 | கடப்பாறை (நடுத்தரம்) | 1 | 978 | 1020 |
| 10 | மண்வெட்டிபிடியுடன் | 1 | 488 | 495 |
| 11 | மண் அள்ளும் பிரஸ் | 1 | 292 | 298 |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளியை வழங்கியுள்ள ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
(எச்1/832/2020)

தீர்மான எண்.19 அனுமதிக்கப்பட்டது.

11)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு 2020–2021ஆம் ஆண்டிற்கு தேவைபடும் கிருமி நீக்கம் செய்ய பயன்படுத்தப்படும் கிருமி நாசினியான நீர்த்த சுண்ணாம்புத்தூள் 10மெட்டிரிக் டன் சப்ளை செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.2615 நாள்31.12.2020–ல் ரூ.3.00லட்சம் மதீப்பீட்டில் பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 20.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | AAP டிரேடிங் கம்பெனி,<br>87, வையாபுரிநகர், முதல்தெரு,<br>கரூர்–639002. | ஒரு கிலோ | ரூ. 13.65/–<br>ஜிஎஸ்டிஉட்பட |
| 2. | வைகை டிரேடர்ஸ்,<br>8/1, எஸ்.பி காம்பளக்ஸ், வி.சி.டி,வி ரோடு,<br>சத்திரோடு,<br>ஈரோடு– 638004. | ஒரு கிலோ | ரூ. 14.28/–<br>ஜிஎஸ்டிஉட்பட |

அலுவலகக் குறிப்பு
மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள AAP டிரேடிங் கம்பெனி, கரூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
(எச்1/10239/2019)

தீர்மான எண்.20 அனுமதிக்கப்பட்டது.

12)கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான TN 47 U 5179 UGD Vehicle, TN 47 H 8781 Compactor, TN 47 AK 0499 Tipper Lorry வாகனங்களுக்கு 2021ம் ஆண்டு தகுதிச் சான்று பெற்று இயக்க வேண்டியுள்ளதாலும் மேலும் வாகனத்தின் அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப் பணிக்கு வாகனம் தேவை என்பதால் மேற்கண்ட வாகனங்களுக்கு பழுதுகள் மற்றும் மராமத்து பணிகள் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.6.00லட்சத்தினை நகராட்சி பொதுநிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(எச்5/5629/2020)

தீர்மான எண்.21 அனுமதிக்கப்பட்டது.

13)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 47 சமுதாய கழிப்பிடங்கள், 10 பொதுகழிப்பிடங்கள், பேருந்து நிலைய இலவச சிறுநீர் கழிப்பிடங்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், முக்கிய பிரமுகர்கள் வருகைகள் மற்றும் திருவிழா காலங்களில் கிருமி நீக்கம் செய்து கிருமி நாசினிகள் தெளித்து பின்பு லைசால் தெளித்து பராமரிக்க வேண்டியுள்ளதால் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் மற்றும் நகரின் சுகாதார நலன் கருதி லைசால் 1500 லிட்டர் வாங்கி வழங்க சுகாதார ஆய்வர் அவர்கள் தனது குறிப்பில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் லைசால் 1500லிட்டர் கொள்முதல் செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.3.80லட்சம் பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படிசெலவினத்தொகை ரூ.3.80லட்சம் பொதுநிதியில் இருந்து செலவுசெய்துகொள்ளமன்றம் அனுமதிக்கலாம். (எச்1/126/2021)

தீர்மான எண்.22 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி